(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 யூன் 07 வெள்ளிக்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 யூன் 18, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 001 - நிகழ்ச்சித்திட்டம் 02 — † 2024 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதி ஆண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறேதேனும் நிதியிலிருந்து அல்லது தொகையிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பத்தின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் எட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மில்லியன் (ரூபா 8,750,000,000) ரூபாவை விஞ்சாத மேலதிக குறைமதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **001** | - | அதிமேதகு சனாதிபதி |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** | - | அபிவிருத்திச் செயற்பாடுகள் • |

| | |
|---|---|
| மூலதனச் செலவினம் | ரூ. 8,750,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 8,750,000,000** |

• கருத்திட்டம் 06 — " தேசிய முன்னுரிமைகளுக்கான தேசிய அளவிலான வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பு", நிகழ்ச்சித்திட்டம் 02 — செலவினத் தலைப்பு 001 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரும் 024, 025, 026, 027, 028 மற்றும் 032 ஆகிய உப கருத்திட்டங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகளை 003 ஆம் உப கருத்திட்டத்திற்கு மாற்றுவதன் மூலம் ரூபா எட்டு பில்லியன் எழுநூற்று ஐம்பது மில்லியன் மாத்திரம் (ரூ. 8,750,000,000) ஒதுக்கீடு செய்யப்படும் .

† 2024 யூன் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 154(6) ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.02.08/2024.02.09 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— டவர் மண்டப அரங்கத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2021),— 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் கீழ் 2023.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய டவர் மண்டப அரங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் நவீன பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.01.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, யூன் 20, வியாழக்கிழமை)**

2141/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டுக்காக சனாதிபதி செயலகத்தின் செலவுத் தலைப்பின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தினதும் அதற்குச் சமமான வேறு நிகழ்ச்சித் திட்டங்களினதும் கீழ் புத்தளம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்குச் சமமான வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கருத்திட்ட முன்மொழிவு களை வழங்கியுள்ள ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரினதும் பெயர், வழங்கியுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு முன்மொழிவும் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு மற்றும் மேற்படி ஒவ்வொரு கருத்திட்ட முன்மொழிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கும் போது பின்பற்றப்பட்ட தகவுதிறன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூலை 09, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1909/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை டிப்போவினால் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கல்கிஸ்ஸை பிரதான பேருந்து தரிப்பிடத்தை, அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு கையகப்படுத்தப்பட்ட காணியின் ஆரம்ப உரிமையாளரின் பெயர் மற்றும் நில வரைபட இலக்கம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்குப் பயன்படுத்திய காணியின் அளவு யாதென்பதையும்;

(v) பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு மேற்படி காணியை கையகப்படுத்திய வருடம் யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணி எந்த நிறுவனத்திற்கு உரித்தானது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1913/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்திலுள்ள அரச மருந்தகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு மருந்தகமும் அமைந்துள்ள இடத்தின் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) கொழும்பு மாவட்டத்தில் அரச மருந்தகக் கிளை வலையமைப்பினை மேலும் விஸ்தரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1917/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தொழில் பிணக்குகள் தொடர்பில் தொழில் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் இன்றளவில் தீர்க்கப்பட்டுள்ள மற்றும் தீர்க்கப்படாதுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) தொழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மூலமாக நட்டஈடு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1942/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாலுற்பத்திப் பொருட்களின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இலங்கையில் ஆண்டொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுற்பத்திப் பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுற்பத்திப் பொருட்களின் அளவானது, ஆண்டொன்றில் இலங்கைக்குத் தேவையான பாலுற்பத்திப் பொருட்களின் அளவில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iv) பாலுற்பத்திப் பொருட்கள் அதிகளவில் நுகரப்படும் மாகாணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் அதிகளவு பாலுற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) இலங்கையில் பாலுற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1969/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) சுங்கத் திணைக்களத்தின் ஊழியர்களின் எண்ணிக்கையும் இணைந்த சேவையின் ஊழியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) சுங்கத் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர்களுக்கும் கனிஷ்ட அலுவலர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இணைந்த சேவையின் நிறைவேற்று அலுவலர்களுக்கும் கனிஷ்ட அலுவலர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1995/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடும் வரட்சி காரணமாக ஹம்பாந்தோட்டை, உடவலவ வலயம், கிரம ஒய வலயம் மற்றும் மலலஆர வலயம் உட்பட தென் கிழக்கு சமவெளி வலயங்கள் பலவற்றில் விளைநிலங்கள் அழிவடைந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக 'சுரகிமு ருஹுணு' அமைப்பினால் முன்மொழியப்பட்டுள்ள, பழைய நீர்ப்பாசன பாதுகாப்பு கட்டமைப்பினை முறைப்படுத்தல் மற்றும் ஈர வலயத்தின் மேலதிக நீரை மேற்குறிப்பிட்ட வலயங்களுக்கு அனுப்புதல் (களு கங்கையை திசைதிருப்பும் கருத்திட்டம்) என்ற இரண்டு தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்குறிப்பிட்ட வலயங்களில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையை போக்குவதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ள கிங் கங்கை, நில்வளா கங்கை கருத்திட்டங்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2008/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் அரச மற்றும் தனியார் துறைக்குச் சொந்தமான நிலப்பரப்பின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தேயிலை உற்பத்தியின் மூலமாக ஈட்டப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) இன்றளவில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) சேதனப் பசளையைப் பயன்படுத்துவதன் மூலமாக வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் தேயிலை அறுவடையின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகள் யாவையென்பதையும்;

(ii) வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதியின் மூலமாக ஈட்டப்படும் வருடாந்த அந்நியச் செலாவணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) உலக தேயிலைச் சந்தையில் இலங்கையின் தேயிலைக்குக் கிடைத்துள்ள இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2024/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் குழப்பகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கக்கூடிய செய்திகளை வெளியிடும் பல போலி ஊடகங்கள் இலங்கையில் செயற்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஊடகங்கள் யாவையென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத போலி இணையத்தளங்களைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2042/2024

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2055/2024

கௌரவ வேலு குமார்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யுனெஸ்கோ அமைப்பினால் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மேற்படி நகரில் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள புனித இடங்களும் கட்டடங்களும் யாவை என்பதையும்;

(ii) அவற்றைப் பாதுகாப்பதற்கு யுனெஸ்கோ அமைப்பு நிதி உதவி அளிக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அளிக்கப்படுகின்ற வருடாந்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள தனியார் கட்டடங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்கும் யாதேனும் நிதி உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி உதவி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட இடங்கள் உள்ளபடியே பேணப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கண்டி நகரை உலக மரபுரிமை நகரமாக பேணிச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூலை 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முச்சக்கர வண்டிச் சேவையின் மூலம் மக்களின் போக்குவரத்துத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போதிலும், அச்சேவையை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்று இல்லை என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிச் சாரதிகள் முறைகேடாக பணம் அறவிடுவதன் காரணமாக பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளில் கண்டி மாவட்டத்திலுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிச் சேவையை ஒழுங்குபடுத்துவதற்காக தற்போது முறையான பொறிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) முச்சக்கர வண்டிச் சாரதிகளை அடையாளம் காண்பதற்காக அடையாள அட்டை மற்றும் சீருடையை அறிமுகப்படுத்துவதற்கும் முச்சக்கர வண்டிக்கு கட்டண மானியொன்றைப் பொருத்துவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் அமுல்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

43/2024

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிங்கராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்தைச் சுற்றி அமைந்துள்ள 13 ஒதுக்குக் காடுகளை சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்திற்குள் உள்ளடக்கி அந்த வன ஒதுக்கத்தின் விஸ்தீரணத்தை 30,000 ஹெக்டெயர் வரை அதிகரிப்பதற்கான வர்த்தமானப் பத்திரிகையில் முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2019 ஆம் ஆண்டில் ஒப்பமிட்டுள்ளார் என்பதையும்;

(ii) ஆயினும், இவ்வர்த்தமானப் பத்திரிகை இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக, சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்துக்குள் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு ஒதுக்குக் காடும் அவற்றின் நில விஸ்தீரணம் ஏக்கர்களிலும் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்படுவது தாமதமடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையை பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2077/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஊழியர் சேமலாப நிதியத்தில் இயங்கும் நிலையில் காணப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி கணக்குகளுக்கு செலுத்தப்பட்ட வட்டி வீதம் வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி வட்டி வீதங்களைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது நிலவும் பணவீக்கத்திற்கு அமைய மேற்படி வட்டி வீதங்கள் போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

2085/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமேல் மாகாணத்தில் —

(i) சுத்தமான குடிநீர் வசதிகளில்லாத கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) சுத்தமான குடிநீர் வசதிகளில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக இன்றளவில் செயற்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை, அவ்வொவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) சுத்தமான குடிநீர் வசதிகளில்லாத மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2143/2024

கௌரவ உதய கம்மன்பில,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை மற்றும் தர்மாசார்ய பரீட்சை என்பன இலங்கை தகைமைகள் சட்டகத்தின் கீழ் தரப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தரப்படுத்தல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூலை 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

309/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டின் நலன் கருதி சர்வதேச உறவுகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங் களுக்காக 2020.08.20 தொடக்கம் இன்று வரை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் கலந்துகொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயங்களிலும் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அலுவலர்களினதும் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களின் மூலம் அடையப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

359/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற —

(i) வாகன விபத்துகளின் எண்ணிக்கை;

(ii) உயிரிழப்புகள் நிகழ்ந்த வாகன விபத்துகளின் எண்ணிக்கை;

(iii) வாகன விபத்துகளால் மரணமடைந்த, முழுமையாக அங்கவீனமுற்ற, பலத்த காயங்களுக்குள்ளான மற்றும் சிறிய காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(iv) விபத்துக்குள்ளான வாகனங்களின் எண்ணிக்கை;

(v) விபத்துக்குள்ளான வாகனங்களுக்கு மத்தியில் மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்த வாகனங்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டுவாரியாக தனித்தனியே எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வாகன விபத்துகளின் காரணமாக அரசாங்கம் ஆண்டுதோறும் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ள மேலதிகச் செலவினம் கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வருடாந்த மேலதிகச் செலவினமானது, சுகாதாரம், நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து ஆகிய ஒவ்வொரு துறைக்கும் ஏற்ப தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

369/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் பௌத்த வணக்கஸ்தலங்களின் எண்ணிக்கை;

(ii) இவற்றுக்கு மத்தியில் காணப்படுகின்ற விகாரைகளின் எண்ணிக்கை;

(iii) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள பௌத்த பிக்குமார்களின் எண்ணிக்கை;

(iv) பௌத்த பிக்குமார்கள் இல்லாமையினால் தற்போது மூடப்பட்டுள்ள விகாரைகளின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளை முறையாக பேணிச் செல்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் 'சசுன் உதாவ' எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

374/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுங்கத்தில், உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் சேவைக்கு வருகை தருவதையும் வெளியேறுவதையும் பதிவிடுவதற்காக விரல் அடையாளப் பதிவு முறைமையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) சேவைக்கு வருகை தருவதையும் வெளியேறுவதையும் பதிவிடுவதற்கு விரல் அடையாளப் பதிவு முறைமையைப் பயன்படுத்தாத உத்தியோகத்தர்களினதும் பணியாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றைப் பதிவிடாமல் 2022ஆம் ஆண்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களினதும் பணியாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் பெற்றுள்ள மொத்த மேலதிக நேரக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை சுங்கத்தில் மோசடியான முறையில் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் பெறப்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அந்நடவடிக்கைகள் காரணமாக இன்றளவில் வெளிப்பட்டுள்ள மோசடிச் சம்பவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அம்மோசடிச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

381/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டாகும்போது காணப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கான சொத்துக்களின் தேறிய பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) அதன் பயனாளிகள் நலன்புரி உரித்துக்களை பெறக்கூடிய வயதெல்லை யாதென்பதையும்;

(iv) மேற்படி திட்டத்தின் வருடாந்த பயனாளிகளின் எண்ணிக்கையும் அவர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் தொகையும் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி திட்டத்தின் நலன்புரி உரித்துக்களைப் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் இன்றளவில் நலன்புரி உரித்துக்கள் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு நலன்புரி உரித்துக்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அவர்களுக்கு வழங்கப்படவுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி திட்டம் இன்றளவில் செயலிழந்துள்ளதா என்பதையும்;

(ii) அதனைச் செயல்முனைப்புடன் பேணிச் செல்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

467/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கான பிளாஸ்டிக் கழிவு இறக்குமதியை தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி யாது;

(ii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிளாஸ்டிக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) பிளாஸ்டிக் கழிவு இறக்குமதியை தடை செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒருசில நிறுவனங்களுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் யாவை;

(vi) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

512/2024

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் பதவிய, போகஸ் ஹந்திய பிரதேசத்தில் அமைந்துள்ள காமினி வித்தியாலயத்தில் தற்போது பாரிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் மேற்குறித்த பாடசாலையின் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களினால் பாரிய ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

543/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, சேவையாற்றுகின்ற கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) கல்வி அமைச்சு மேற்படி பாடசாலைகளின் பாடவிதானங்கள் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் மாணவர் செயற்பாடுகள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

566/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான காணிகளில் தற்போது பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவையென்பதையும்;

(ii) அப் பயிர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சபைக்குச் சொந்தமான காணிகளிலுள்ள, வணிக ரீதியில் பெறுமதியான மரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தாவரங்களின் பதிவேடொன்று பேணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மரங்கள் தனியார் துறைக்கு விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், விற்பனையின்போது பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1242/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களுக்கும் வேறு கடமைகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் வெற்றிடங்கள் நிலவுமாயின், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி எண்ணிக்கையானது ஒவ்வொரு நபர்/நிறுவனத்திற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2024 யூலை 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

592/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஓய்வூதியம் பெற்ற மற்றும் இன்றளவில் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவ் ஒவ்வொரு உறுப்பினரின் ஓய்வூதியத் தொகையும் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி உறுப்பினர்களில் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப் படுத்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவ் ஒவ்வொரு உறுப்பினரினதும் ஓய்வூதியத் தொகை மற்றும் சேவைக்காலம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) ஓய்வூதிய உரித்தை பெறுவதற்கு பாராளுமன்ற உறுப்பினரொருவர் பூர்த்தி செய்ய வேண்டிய சேவைக்காலம் யாதென்பதையும்;

(iv) 5 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு உரித்தாகும் ஓய்வூதியத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) பாராளுமன்ற உறுப்பினரொருவரின் ஓய்வூதியம், சேவைக்காலத்தின் அடிப்படையில் எவ்வாறு மாற்றமடைகின்றதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

614/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் நுண்நிதிக்கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு பதிவு செய்யப்படாத நுண்நிதி நிறுவனங்கள் உள்ளனவென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நுண்நிதி நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களின் வட்டி வீதங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுண்நிதி நிறுவனங்களினால் கடன் செலுத்துவதை ஆரம்பிப்பதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சலுகைக் காலம் யாதென்பதையும்;

(iii) கடனை முறைப்படி மீள்செலுத்தாதவர்களுக்கு நுண்நிதி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினால் உடல் மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்கள் செய்யப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) நுண்நிதி நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அவ்வொழுங்குபடுத்தல் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

638/2024

கௌரவ பீ.வை.ஜீ ரத்னசேக்கர,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பாலுக்கான முழுத் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாலுக்கான தேவையில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு எவ்வளவென்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டில் பால் மா இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த முட்டை உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கு நிகராக 2023 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தியின் ஏற்ற இறக்கம் எவ்வாறு காணப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இன்றளவில் முட்டையொன்றின் உற்பத்திச் செலவு எவ்வளவென்பதையும்;

(iv) உற்பத்திச் செலவைக் குறைத்து, முட்டை விலையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1093/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படும் சேவைகள் யாவை;

(iv) மேற்படி சங்கங்களினால் நிருவகிக்கப்படும் பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(v) குருநாகல் மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்படும் செயன்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1128/2024

கௌரவ டி. வீரசிங்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை நிறுவப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) இன்றளவில் அவற்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iv) புதிய நெற்களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், எப் பிரதேசங்களில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச நெற்களஞ்சியசாலைகள் வேறு செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்செயற்பாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1155/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சொந்தக் காணி இல்லாத, குறைந்த வருமானம் பெறுகின்றவர்கள் இன்றளவில் இனங் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) இவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கு வெளிப்படைதன்மையுடன் கூடிய ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி முறையியல் அமுலாக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1247/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற் சட்ட மறுசீரமைப்புக்களின் அறிமுகப்படுத்தல் தொடர்பான முன்னேற்றத்தினையும்;

(ii) முன்னேற்றம் இருப்பின், இது தொடர்பாகப் புதிய சட்டவாக்கம் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியினை மற்றும் அது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் திகதியினை, வெவ்வேறாகவும்;

(iii) முன்னேற்றம் இல்லையெனின், தாமதத்திற்கான காரணத்தினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறைவான பெண் ஊழியப் படைப் பங்கேற்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசத் தொழிற் சட்ட மறுசீரமைப்புக்களில் ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தொடர்புடைய ஏற்பாடுகளையும்;

(iii) இல்லையெனின், உள்ளடக்கப்படாமைக்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உத்தேச மறுசீரமைப்புக்களில் நெகிழ்வுத்தன்மையுடைய வேலை மற்றும் பகுதி நேர வேலை தொடர்பான ஏற்பாடுகளையும்;

(ii) தற்போது நிலவுகின்ற பெண் ஊழியத்தின் முறைசாராமயமாக்கத்தின் விளைவுகள் பரிசீலிக்கப்பட்டனவா என்பதையும்;

(iii) இல்லையெனின், பெண் ஊழியத்தினை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1253/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது அப்பணியகம் பின்பற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரம் வழங்கும்போது அச்செயன்முறையின் சுயாதீனத் தன்மைக்கு அழுத்தம் விடுக்கப்படுவதாக பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் ஊழல் நிறைந்த நிறுவனமாக மாறியுள்ள மேற்படி நிறுவனத்தை, அந்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1282/2024

கௌரவ அசங்க நவரத்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன விலங்குகளின் செயற்பாடுகள் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சேதங்களைக் குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1287/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘சிரம வாசனா நிதியம்’ ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி நிதியத்தின் மூலமாகப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப்பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிதியத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 1/2024

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 2/2024

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2024

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2024

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2024

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/2024

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.9/2024

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை வெளியிடுதல்,— மனித பரிணாம வளர்ச்சியிலிருந்து தொல்பொருளியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், உரோம, கிரேக்க மற்றும் பாரசீக வரலாறுகளை ஆய்வு செய்து இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் குழாத்தின் கீழ் அரச அனுசரணையுடன் வெளியிடுவதற்கு உகந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம்,— எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு துறையிலும் தீவிரவாதக் கருத்துக்கள் காணப்படுவது மிகவும் பாதகமானது என்பதாலும், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர் மதத் தீவிரவாதம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டிருப்பதாலும் மதத் தீவிரவாதம் உருவாவதையும் ஊக்குவிக்கப்படுவதையும் தடுப்பதற்கும் ஏற்கனவே அதற்கு இரையாகியுள்ள நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2024

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2024

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டம் ஒன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 17/2024

கௌரவ ஹேஷா விதானகே,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z- புள்ளி (Z-Score) அடிப்படையில் அரசதுறை சார்ந்த சகல தொழில் வெற்றிடங்களையும் நிரப்புதல்,— அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது முந்திய அரசாங்கங்களும் தற்போதைய அரசாங்கமும் அரசியல் பக்கச்சார்பு அல்லது விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பின்பற்றியுள்ள கொள்கைகள் அரச சேவையின் சுயாதீனத் தன்மைக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாலும், அதன் காரணமாக தீவிர அரசியல்மயப்படுத்தலுக்கு உட்பட்டுள்ள அரச சேவையை முழுமையாக சுயாதீனம் கொண்ட ஒன்றாக மாற்றவேண்டிய தேவை உள்ளதாலும், கல்வித் தகைமைகளின் அடிப்படையில் மாத்திரம் தொழில்களை வழங்கும்போது திறமையான மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்கு நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுவதால் இளைஞர்களின் விரக்தியை அடியோடு ஒழிக்க அதன் மூலம் வாய்ப்புக் கிடைப்பதாலும், மாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கான வாய்ப்பு சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு கிடைப்பதன் ஊடாக தொழில் பெறுநர்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் உயர் வினைத்திறன் கொண்ட சேவையை அரச துறைக்குப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதாலும், அனைத்து அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் மாகாண சபைகள், அனைத்து இணை நிறுவனங்களிலும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z-புள்ளியினை கவனத்தில் கொள்ள அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் அரசியலமைப்பை 'பிரெயில்' எழுத்து முறையிலும் "கேட்பொலி" (audio) வடிவத்திலும் தயார்செய்தல்,— அரசியலமைப்பானது எந்தவொரு நாட்டினதும் அடிப்படைச் சட்டமாகவும் அரசின் அடிப்படை மாதிரியாகவும் அமைந்திருப்பதாலும், சுமார் இருபத்திரண்டு மில்லியன்களான இலங்கைப் பிரசைகளில் சுமார் இரண்டு மில்லியன் பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளதாலும், மாற்றுத்திறனாளி களுக்கு மத்தியிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற பிரசைகளாக உள்ளதாலும், நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய அறிவு மற்றும் புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற மக்களுக்காக இலங்கையின் அரசியலமைப்பை 'பிரெயில்' எழுத்துமுறையிலும் 'கேட்பொலி' (audio) வடிவத்திலும் தயார் செய்வதற்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய தகுதியின் அடிப்படையிலும் பாடசாலை அடிப்படையிலும் தலா 50% அமையும் வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் சுட்டியாகிய Z புள்ளியை (Z-score) கணிப்பிடுதல்,— க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் கலைப் பீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக பீடங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் அடிப்படை மற்றும் சுட்டி Z புள்ளியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இந்த முறையியலுக்கு அமைவாக Z புள்ளியில் 40% தேசிய தகுதியின் (national merits) அடிப்படையிலும் 55% மாவட்ட அடிப்படையிலும் (district basis) 5% மிகவும் பின்தங்கிய மாவட்டங்களின் (remote districts) அடிப்படையிலும் அமையும் வகையில் கணிப்பீடு செய்யப்படுவதாலும், ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒரே சமனான புள்ளி மட்டத்தை அல்லது பெறுமானத்தை பிரதியீடு செய்தல் நீதியானதாகவும் நியாயமானதாகவும் அமையாததாலும், மாவட்ட மற்றும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் எனும் அடிப்படைக்குப் பதிலாக பாடசாலை அடிப்படையை பிரதியீடு செய்வதன் மூலம் பாடசாலை முறைமையில் உள்ள உயர்தர பிரிவுகளைக் கொண்ட மூவாயிரத்து நாற்பத்திரண்டு (3042) பாடசாலைகளை சில தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தேசிய தகுதியின் கீழ் 50% மற்றும் பாடசாலை அடிப்படையின் கீழ் 50% என்றவாறு பல்கலைக்கழக அனுமதிக்கு Z புள்ளியை கணிப்பிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுதல்,— இலங்கையின் சிங்கள சமூகத்தில் தனிநபர் பெயர்களை சூட்டுகின்ற சந்தர்ப்பங்களில் குடும்பப் பெயரானது பெரும்பாலும் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் காணப்பட்ட கடமைகளையும் மன்னர்களுக்கான பணியையும் பின்புலமாகக்கொண்டு அமைகின்ற காரணத்தினாலும், சில குடும்பப் பெயர்கள் மேற்படி கடமைகளுக்குரிய சாதியினை மேலெழுப்பும் வகையில் அமைந்துள்ளதாலும், நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது தேர்தல்களில் வாக்களிப்பதற்காக வாக்காளர்களின் பெயர்கள் அழைக்கப்படுகின்ற போது அல்லது பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களில் பட்டதாரிகள் அழைக்கப்படுகின்ற போது அல்லது தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கின்ற போது முதற்பெயருடன் குடும்பப் பெயரையும் சத்தமிட்டு அழைப்பதனால் பெரும்பாலானவர்கள் பாரிய அசௌகரியத்திற்கு ஆளாகின்ற காரணத்தினாலும், தற்போதைய சந்ததியினரால் நிராகரிக்கப்படுகின்ற நவீன உலகத்திற்குப் பொருந்தாத இச்சட்டத்தினை, வழக்கத்தினை அல்லது மரபினை நீக்கி மக்கள் முன்னிலையில் தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டளவில் பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று என்னால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கையில் ஆகக்குறைந்தது 5% பிரதிநிதித்துவத்தை அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு வழங்குதல்,— இலங்கையில் இறுதியாக நடாத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி நாட்டில் அங்கவீனர்களின் எண்ணிக்கையானது மொத்த சனத்தொகையில் 8%ஐ விஞ்சியுள்ளதாலும், கிராமிய நிருவாகம் இடம்பெறுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் முதல் தேசிய கொள்கைகள் உருவாக்கப்படும் பாராளுமன்றம் வரையிலான மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கு அங்கவீனர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே காணப்படுவதாலும், அங்கவீனமுற்ற இந்நாட்டு பிரஜைகளுக்கான கொள்கை உருவாக்கம் இடம்பெற்றிருப்பதும் இடம்பெறுவதும் வளர்ச்சியடைந்த நாடுகளின் கோட்பாடுகளுக்கு ஏற்பவல்ல என்பதாலும், அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்களைத் தயார் செய்கையில், ஆகக்குறைந்தது 5%மான பிரதிநிதித்துவம் அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு கிடைக்கும் வகையில் அரசாங்கம் உரிய சட்டங்களைத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நில்வளா கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தை துரிதமாக செயற்படுத்தல்,— 1980 ஆம் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட நில்வளா கங்கை அபிவிருத்தித் திட்டத்தை பூரணப்படுத்த முடியவில்லை என்பதால் மாத்தறை மாவட்டத்திலும் நில்வள பள்ளத்தாக்கிலும் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் பொருளாதாரமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாலும், ஊறுபொக்கு ஓயா மற்றும் கிரம-ஆர என்பவற்றை அம்பாந்தோட்டை வறண்ட வலயத்திற்குத் திசைதிருப்புதல் மற்றும் கீழ் பள்ளத்தாக்கில் பட்டுவிட்ட நீர்த்தேக்கம், அத்துரலிய நீர்த்தேக்கம், கடவெத்துவ நீர்த்தேக்கம் மற்றும் தெதியகல நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களை அமைத்தல் மற்றும் பாதுகாப்பான வலயம் மற்றும் பாதுகாப்பற்ற வலயங்கள் தொடர்பில் மீளவும் கற்றாராய்ந்து கைவிடப்பட்ட அணைகளை (bunds) மீண்டும் நிர்மாணித்தல் என்பவற்றை முதலாகக் கொண்ட மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய நில்வள கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களை துரிதமாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.30/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2024

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.32/2024

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/2024

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.34/2024

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.35/2024

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.36/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/2024

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் "முல்லோயா கோவிந்தன்" என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொாழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2024

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.39/2024

கௌரவ ரோஹண பண்டார,— டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான அடிப்படை அடித்தளத்தை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலகம் தற்போது மிகவும் வேகமாக மாறிவரும் பின்னணியில் அதற்கமைவாக கல்வி முறையும் மாற்றமடைய வேண்டுமென்பதால் இலங்கையிலும் டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.40/2024

கௌரவ ரோஹண பண்டார,— விளையாட்டு அமைச்சின் கணக்காய்வு மற்றும் சட்டப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— தற்போது இலங்கையிலுள்ள கிரிக்கெட் உள்ளிட்ட பல விளையாட்டுச் சங்கங்களில் ஊழல் மலிந்து காணப்படுவதால், இந்த நிலைமையைத் தடுப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சின் கணக்காய்வு மற்றும் சட்டப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.41/2024

கௌரவ ரோஹண பண்டார,— கூட்டுறவு கிராமிய வங்கிகளில் வைப்பாளர்களின் வைப்புக்களைப் பாதுகாத்தல்,— கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்புடைய கிராமிய கூட்டுறவு வங்கிகள் மீது கிராமிய மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உயர் மட்டத்தில் கணப்படுகின்ற போதிலும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தெஹிவளை-கல்கிசை கூட்டுறவு கிராமிய வங்கி, மஹரகம கூட்டுறவு கிராமிய வங்கி போன்ற கிராமிய வங்கிகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள அதன் வைப்பாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதற்குப் பொருத்தமான வேலைதிட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.42/2024

கௌரவ ரோஹண பண்டார,— ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை விளைதிறன்மிக்க வகையில் முதலீடு செய்தல்,— தனியார் துறை ஊழியர்களின் நலன்புரிக்காக தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் வசமுள்ள பணத்தை பங்குச் சந்தையில் பட்டியலிடப்படாத நிறுவனங்களில் முதலீடு செய்வதனூடாக எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப் பெறவில்லையென தேசியக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால், தனியார் துறையின் ஊழியர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையில் மேற்படி பணத்தை பயன்தரும் துறைகளில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.43/2024

கௌரவ ரோஹண பண்டார,— புகையிரத திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்,— துரிதமாக தொழில்நுட்பம் மாற்றமடைந்து வரும் உலகில், காலனித்துவக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திணைக்களச் சட்டகத்தின் கீழ் புகையிரத திணைக்களத்தை மேற்கொண்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதால், மேற்படி திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.44/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதியியல் எழுத்தறிவை மேம்படுத்துதல்,— எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் அதாவது எழுத்தறிவு இலங்கையில் உயர் மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், நிதியியல் எழுத்தறிவு இன்னும் கீழ் மட்டத்திலேயே காணப்படுவதனால், பாடசாலைப் பருவத்திலிருந்தே நிதியியல் எழுத்தறிவினை மக்கள் மயப்படுத்துவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.45/2024

கௌரவ ரொசான் ரணசிங்க,— இலங்கை மாணவர் சமுதாயம் தமது எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்வதன் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல்களை முறையாக வழங்குதல்,— இலங்கையில் க.பொ.த.(சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளுக்கு இலட்சக்கணக்கான மாணவர்கள் வருடாந்தம் தோற்றுவதாலும், இப்பரீட்சைகளில் சித்தி பெறும் மற்றும் சித்தி பெறாத மாணவச் சந்ததியினரின் எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டிய விதம் தொடர்பாக பெரும்பாலான மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் சரியான புரிதல் இல்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதாலும், சரியான தொழில் வழிகாட்டல்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் தமது கடமைகளையும், பொறுப்புகளையும் சரியான முறையில் நிறைவேற்றுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதாலும், இலங்கையில் உள்ள பல்கலைக்கழக கட்டமைப்பில் நடத்தப்பட்டு வருகின்ற பட்டப் படிப்பு பாடநெறிகள், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அவற்றின் பாடநெறிகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் பற்றிய புரிதல், அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் பற்றிய புரிதல், தேசிய மற்றும் சர்வதேசப் புலமைப் பரிசில்களை பெற்றுக் கொள்ளும் முறைகள் பற்றிய புரிதலை முறையான வகையில் ஏற்படுத்துவதற்காக மாணவர் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக, சரியான தொழில் வழிகாட்டல்களை வழங்குவதற்காகவும் அரசாங்கம் நிலையான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2023

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— அரசியல் கட்சிப் பதவி தாங்குநர்களில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்,— அரசியலில் பெண்களின் பங்கேற்பினையும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கும் முழுமை அணுகுமுறையாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் தமது நிறைவேற்றுக் குழுவில் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டத்தில்/இயல்திறனில் குறைந்தபட்சம் 30% மான பெண்களை நியமிக்கத் தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.